## மயிலை அருள்மிகு ஸ்ரீ கண்ணகாதேவி தேவஸ்தானம்

### புனர்நிர்மாணப்பணிகளுக்கான அடிக்கல் நாட்டுவிழா

ஸ்ரீ கண்ணகதேவியின் ஆலய புனர்நிர்மாணப்பணிகளை பூர்வாங்கமாக ஆரம்பித்து வைக்கும் சுபமங்கள நிகழ்வு எதிர்வரும் ஏவிளம்பி வருடம் ஆவணி 19ந்திகதி திருவோண நட்சத்திரமும் அமிர்தசித்தமும் கூடிய சுபதினமான 04.09.2017 திங்கட்கிழமை அன்று பகல் 12.05 இலிருந்து 1.35 மணி வரையான சுபநேரத்தில் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கத் திருவருள் கைகூடியுள்ளது. இந்நிகழ்வு மஹாகணபதி ஆலயத்தின் (தோப்புப் பிள்ளையார்)அபிடேகத் தீர்த்தக்கிணற்றிற்கான அடிக்கல் நாட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து அம்பிகையின் சுற்றுப்பிரகாரம் மற்றும் சுற்றுமதில் என்பவற்றிற்கான அடிக்கல் நாட்டலுடனும் இடம்பெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். இச்சுபகாரியத்தை ஏழாலை ஸ்ரீ வசந்தநாகபூசணி அம்மன் (சின்ன அம்மன் தாயார்) அவர்களின் திருக்கரங்களால் ஆரம்பித்து வைப்பதற்கும் ஸ்ரீ கண்ணகாதேவியின் அருட்கடாட்சம் கைகூடியுள்ளமை எமக்கும் எமது மக்களுக்கும் பெரும் பாக்கியமாகவும் அமைகின்றது. வரும் 2018ம் ஆண்டு தை மாதம் ஆலயத்தின் பாலஸ்தாபனம் இடம்பெற்று வெகுவிரைவில் கும்பாபிஷேகமும் இடம்பெறத்திருவருள் கைகூடியுள்ளது. அம்பாள் அடியார்கள் அனைவரும் இப்புண்ணிய நிகழ்வில் கலந்து அம்பிகையின் அருட்கடாட்சத்தை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

சுபம்